# வழுவாதபடி

## வழுவாதபடி உங்களைக் காக்கவும் (யூதா 1:24)




அநேக நேரங்களில், நம் வாழ்வில் எதிர்மறையான காரியங்கள் நிகழும்பொழுது அல்லது எதிர்பாராத ஒரு துன்பம் உண்டாகும் பொழுது, அது நம் சரீரத்தை பாதிக்கும்பொழுதும் அல்லது மனதை பாதிக்கும்பொழுதும், தேவனை பற்றிய ஒரு உறுதியான விசுவாச நிலையில் இருந்து நம்மை அவை வழுவி போக செய்கிறது. பேதுருவுக்கு ஒரு நெருக்கடியான சூழ்நிலை உண்டான பொழுது, ஆண்டவரையே மறுதலித்தார். ஆண்டவராகிய இயேசுவோடு படவில் இருந்த சீஷர்கள், பலத்த சூழல் காற்று உண்டாகி, படவு நிரம்பத்தக்கதாக அலைகள் அதின்மேல் மோதின பொழுது, நொடி பொழுதில் அவர்கள் விசுவாசம் ஆட்டம் கண்டது **(மாற்கு 4:37,38)**, ஆண்டவரோ **"ஏன் இப்படிப் பயப்பட்டீர்கள்? ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமற்போயிற்று என்றார். " (மாற்கு 4:40)**.

சில நேரத்தில், நம்மை நோக்கி சிலர் பேசும் கடுமையான / பொய்யான வார்த்தைகள், சிலருடைய துரோக செயல்கள், ஆண்டவர் நம்மோடு இருக்கிறார், அவர் நமக்காக வழக்காடுவார் என்பதை மறக்க செய்து, நாம் அதற்கு எதிர்வினையாற்ற செய்கிறது. யோசேப்பின் வாழ்க்கையில், அவருடைய சகோதரரின் துரோக செயல்கள், போத்திபார் மனைவியின் பொய் குற்றசாட்டு, பானபாத்திரகாரனின் நன்றி மறந்த தன்மை, சிறைவாசம், அடிமைத்தனம் என யாவும் அவருடைய உடலையும், மனதையும் வெகுவாக பாதித்திருக்கும். ஆகிலும், தேவனை பற்றிய விசுவாசத்திலிருந்து துளியும் அவர் வழுவி போகவில்லை. காரணம், வேத வசனம் கூறுகிறது, **"கர்த்தரோ யோசேப்போடே இருந்து, அவன்மேல் கிருபைவைத்து " (ஆதி 39:21)** என்று.

ஆம் மேற்கண்ட எந்த காரியமும் தேவ உறவில் இருந்து யோசேப்பை விலக / வழுவ செய்ய முடியவில்லை. காரணம், துன்பங்கள் இருந்தாலும், அதின் நடுவே தேவனும் தன்னோடு இருக்கிறார் என்ற அறிவே அவரை வழுவாமல் காத்தது. மோசேயின் வாழ்விலும் இதுவே நடந்தது. எத்தனையோ முறை சூழ்நிலைகளை கண்டு இஸ்ரவேல் மக்கள் வழுவி

போனாலும், மோசேயோ உறுதியாய் இருந்தார். தாவீதின் வாழ்விலும் இதுபோன்ற சூழ்நிலை ஏற்பட்டது, **“தாவீது மிகவும் நெருக்கப்பட்டான்; சகல ஜனங்களும் தங்கள் குமாரர் குமாரத்திகளினிமித்தம் மனக்கிலேசமானதினால், அவனைக் கல்லெறியவேண்டும் என்று சொல்லிக்கொண்டார்கள்; தாவீது தன் தேவனாகிய கர்த்தருக்குள்ளே தன்னைத் திடப்படுத்திக்கொண்டான். “ (1 சாமு 30:6).**

சுற்றிலும் உள்ள அனைவரும் நம்மை நெருக்கும் பொழுது, பிரச்சனைக்கு தீர்வு காண்பதை காட்டிலும், பிரச்சனையை விட்டு விடுபடுவதே மேல் என்று எண்ணுவதாலேயே, வழுவி போகிற சூழ்நிலை ஏற்படுகிறது. இன்று அநேகர் தங்கள் வாழ்வை முடித்து கொள்வதற்கும் இதுவே காரணம். ஆனால் புதிய ஏற்பாட்டின் காலத்தில், இந்த கிருபையின் காலத்தில், **யூதா 1:24** கூறுகிறது **“வழுவாதபடி உங்களைக் காக்கவும் “**, அவரே இருக்கிறார். பவுலின் வாழ்வில் ஒரு முள் கொடுக்கபட்டிருந்த பொழுதிலும், அது பவுலுக்கு துன்பத்தை கொண்டு வந்த பொழுதிலும், **“அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன். “ (2 கொ 12:9)**, என்று தேவன் அவருடைய கிருபையை பொழிந்த பொழுது அவரால் அதை தாங்கி கொள்ள முடிந்தது. இன்னும் புதிய ஏற்பாட்டு காலத்தில், சபையின் நடுவே எத்தனையோ உபத்திரவங்கள் உண்டான பொழுது, இஸ்ரவேல் மக்கள் போல் வழுவி போகாமல், அவற்றை எல்லாம் வெற்றியாக கடந்து வர முடிந்தது.

இன்றும் ஆண்டவருடைய இரத்தம் நம் ஒவ்வொருவருக்காகவும் சிந்தப்பட்டுள்ளது, சத்துருவாகிய பிசாசானவன் ஏதாவது ஒரு போராட்டத்தை, துன்பத்தை நம் வாழ்வில் கொண்டு வந்து போட்டு, எப்படியாவது நாம் ஆண்டவரை விட்டு வழிவிலகி, வழுவி செல்ல செய்ய பார்பான். ஆனால் வழுவாதபடி நம்மை காக்கிற ஒருவர் நமக்கு உண்டு என்ற அந்த ஒரு விசுவாசம், எத்தகையான சூழ்நிலையிலும் கற்பாறையாகிய கிறிஸ்துவின் மேல் நாம் திடமாய் நிற்க உதவி செய்யும். ஆமென், அல்லேலூயா.